# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2009 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க, இலங்கை ஜமாஅத் அன்சாரிஸ் சுன்னத்தில் முஹம்மதிய்யா (கூட்டிணைத்தல்) சட்டம்*

---

*(2009 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2009, ஒற்றோபர் மாதம் 23 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 11.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2009 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க, இலங்கை ஜமாஅத் அன்சாரிஸ் சுன்னத்தில் முஹம்மதிய்யா (கூட்டிணைத்தல்) சட்டம்**

[*2009 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.ஓ. (கூட்.) 2/2008*

**இலங்கை ஜமாஅத் அன்சாரிஸ் சுன்னத்தில் முஹம்மதிய்யாவைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்**

*இலங்கை ஜமாஅத் அன்சாரிஸ் சுன்னத்தில் முஹம்மதிய்யா என அறியப்படுவதும் அழைக்கப்படுவதுமான கழகமொன்று சொல்லப்பட்ட கழகத்துடன் தொடர்புடைய எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் அதன் உறுப்பினர்களால் உடன்பட்டுக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க பயனுற நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கத்திற்காக இலங்கையில் தாபிக்கப் பட்டுள்ளதாதலாலும் :* முன்னுரை.

*சொல்லப்பட்ட கழகமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுகாலவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாதலாலும், கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ள தாதலாலும் விண்ணப்பத்தை அனுமதிப்பது பொதுமக்களின் நன்மைக்கானதாதலாலும் :*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

**1.** இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க, இலங்கை ஜமாஅத் அன்சாரிஸ் சுன்னத்தில் முஹம்மதிய்யா (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "கழகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை ஜமாஅத் அன்சாரிஸ் சுன்னத்தில் முஹம்மதிய்யாவின் தற்போதைய உறுப்பினர்களாக இருக்கின்ற அல்லது இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் (இதனகத்துப் பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) உறுப் பினர்களாக இதன்பின்னர் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகை இலங்கை ஜமாஅத் அன்சாரிஸ் சுன்னத்தில் முஹம்மதிய்யாவைக் கூட்டிணைத்தல்.

2-PL 004199 -1,050 (2009/07)

யோரான அத்தனை ஆட்களும் "இலங்கை ஜமாஅத் அன்சாரிஸ் சுன்னத்தில் முஹம்மதிய்யா" என்ற பெயர்மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அது அப்பெயர் கொண்டு வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்றவும் அது முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.*

**3**. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) குர்ஆனினையும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சுன்னாவினையும் கற்பிக்கின்ற அடிப்படையில் இஸ்லாமிய சமயத்தைக் கற்பித்தல் ;

(ஆ) இஸ்லாமியக் கோட்பாடுகளுக்கிணங்க வாழவும் தங்களை நடத்திச் செல்லவும் முஸ்லிம் மக்களை தயார்படுத்தலும் அவர்களுக்கு வழிகாட்டலும் ;

(இ) இஸ்லாமிய நற்செய்திகளைப் பரப்புவதற்கும் சமய செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கும் முஸ்லிம் மக்களுக்கு வேண்டிய அறிவையும் ஆற்றலையும் பெற்றுக் கொடுத்தல் ;

(ஈ) அரபு மொழியைப் பயில்வதற்கு ஊக்கமளித்தலும் அனைத்து மாவட்டங்களிலும் அரபுக் கல்லூரிகளையும் மதுரஸாக்களையும் தாபித்தல், பேணுதல் என்பன உட்பட கற்கைப் பாடநெறிகளை நடத்துதலும் இது தொடர்பில் மாணவர்களுக்கு எல்லா உதவிகளையும் வழங்குதலும் ;

(உ) அனைத்து மாவட்டங்களிலும் கிளை ஒழுங்கமைப்புக் களைத் தாபித்தலும் பேணுதலும் நிருவகித்தலும் அபிவிருத்தி செய்தலும் ;

(ஊ) ஆங்கிலம், சிங்களம், தமிழ் மற்றும் அராபிய மொழி களில் நூல்கள், சஞ்சிகைகள், மஞ்சரிகள், பருவகால வெளியீடுகள், துண்டுப் பிரசுரங்கள், செய்தித்தாள்கள், ஒலி, ஒளி மற்றும் இறுவட்டு, பலவின ஊடகச் சாதனங்கள் என்பவற்றை அச்சடித்தலும் வெளியிடு தலும் விநியோகித்தலும் ;

(எ) முஸ்லீம்களுக்காக பள்ளிவாசல்களையும் வழிபாட்டி டங்களையும், இஸ்லாமிய நூலகங்களையும் நிர்மாணிப் பதற்கும் பழுதுபார்ப்பதற்கும் புனரமைப்பதற்கும் புனர்நிர்மாணம் செய்வதற்கும் சாதனங்களை அமைப்ப தற்கும் உதவியளித்தல் ;

(ஏ) முஸ்லீம்களிடையே இஸ்லாமிய அறிவை மேம்படுத்து வதற்கு இஸ்லாமியக் கோட்பாடுகளின் செயல்முறை அனுட்டானத்தை ஊக்கு விப்பதற்கும் வகுப்புக்கள், கூட்டங்கள், கருத்தரங்குகள், ஆய்வரங்குகள், வேலைக் களங்கள் என்பவற்றை ஒழுங்கு செய்தலும் நடத்துதலும்;

(ஐ) இலங்கையிலுள்ள முஸ்லிம் சமுதாயத்தின் கல்வி, சமூக, பொருளாதார சேமநலனுக்குத் தேவையான உதவியை யும், வசதிகளையும் வழங்குதல் ;

(ஒ) இலங்கையிலுள்ள பல்வேறு மதக் குழுக்களுக்கும் சமுதாயங்களுக்கும் இடையே மத, சமூக ஒற்றுமைக்கு அவசியமான உதவியும் வசதிகளும் வழங்குதல் ; அத்துடன்

(ஓ) இலங்கையிலும் இலங்கைக்கு வெளியேயும் இவற்றை யொத்த முயற்சிகளில் ஈடுபட்டு வேறு இஸ்லாமிய நிறுவனங்களுடன் நட்பியல் உறவுகளைத் தாபித்தலும் பேணுதலும்.

கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.

**4**. கூட்டுத்தாபனம் இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய :-

(அ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை முன்னேற்று வதற்கு கூட்டுத்தாபனத்திற்குச் சட்டபூர்வமாக தேவைப் படக்கூடிய காணிகளை அல்லது கட்டிடங்களைக் கொள்வனவு செய்வதற்கு, தேவைக்கெடுப்பதற்கு,

வாடகைக்குப் பெறுவதற்கு, நிருமாணிப்பதற்கு அல்லது வேறுவகையில் பெற்றுக் கொள்வதற்கும் ; அத்துடன் அது உசிதமானதெனக் கருதக்கூடியவாறு அதனைக் கையாள்வதற்கும் அல்லது கையுதிர்ப்பதற்கும் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு உள்ளூரில் அல்லது வெளிநாட்டிலுள்ள எவரேனும் ஆளிடமிருந்து அல்லது கூட்டிணைக்கப்பட்டதாயினுஞ்சரி கூட்டிணைக்கப்படாததாயினுஞ்சரி ஆட்கள் குழுவிடமிருந்து எல்லா விதமான ஒப்பப்பணங்களையும் மானியங்களையும் நன்கொடைகளையும் கொடைகளையும் கோருவதற்கும் திரட்டுவதற்கும் பெறுவதற்கும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமிப்பதற்கும் ஊதியம் வழங்குவதற்கும் அவர்கள்மீது ஒழுக்காற்றுக்கட்டுப்பாட்டையும் பிரயோகிப்பதற்கும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் நோக்கத்திற்கு பணம் திரட்டுவதற்கும் அல்லது கடனெடுப்பதற்கும் கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் தனிசை அல்லது கடப்பாட்டை அது பொருத்தமானதெனக் கருதக்கூடிய அத்தகைய முறையில் நிறைவேற்றுவிப்பதற்கும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கு உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளை முகாமைச்சபை பொருத்தமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய முறையில் முதலீடு செய்வதற்கும் அத்தகைய முதலீட்டை காலத்துக்குக்காலம் வேறுபடுத்துவதற்கும் கைமாற்றுவதற்கும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை இலங்கையிலும் வெளிநாடுகளிலும் முன்னெடுத்துச் செல்வதற்கு கூட்டுத்தாபனத்தால் அனுசரணை செய்யப்பட்டு நடத்தப்படுபவையுமான பல்வேறு செயற்பாடுகளுக்கும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கும் கருத்திட்டங்களுக்கும் வெவ்வேறு கிளைகளையும் நிறுவனங்களையும் தாபித்தல், ஒழுங்குசெய்தல் அத்துடன் பேணுதல் ;

(எ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்குத் தேவைப்படும் எவையேனும் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கும் மாற்றுவதற்கும் பேணுவதற்கும் ;

(ஏ) ஏதேனும் அசைவற்ற அல்லது ஆளுக்குரிய ஆதனத்தைப் பாதிக்கும் எவையேனும் சட்டபூர்வமான நம்பிக்கைப் பொறுப்புக்களையும் நிபந்தனைகளையும் பொறுப்பேற் பதற்கும், ஏற்றுக்கொள்வதற்கும், நிறைவேற்றுவதற்கும், நிர்வகிப்பதற்கும் ;

(ஐ) ஏதேனும் தரும நோக்கத்திற்கு பணத்தை ஒப்பப் பணமாகச் செலுத்துவதற்கும் அல்லது மானியமாக செலுத்துவதற்கும் ; அத்துடன்

(ஒ) கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் பிரயோகிப்பதற்கும் நிறைவேற்று வதற்கும் புரிவதற்கும் அல்லது கூட்டுத்தாபனத்தின் அலுவல்களைக் கொண்டுநடாத்துவதற்கும் அல்லது அதன் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதற்கும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் உடன்படிக்கைகளையும் நேரடி யாகவோ அல்லது கூட்டுத்தாபனத்தால் அதன் சார்பில் அதிகாரமளிக்கப்பட்டுள்ள அதன் அலுவலர் கள் அல்லது சேவையாளர்கள் அல்லது முகவர்கள் ஊடாகவோ செய்துகொள்ளுதலும் அல்லது புரிதலும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**5.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டி ருத்தல் வேண்டும் என்பதுடன் கொடை, வேண்டுகோள்கள், நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியங்கள் என்றவகையில் இதற்கு முன்னர் அல்லது இதன் பின்னர் கூட்டுத்தாபனத்திற்காகவும் அதன் கணக்கிலும் பெறப் படும் எல்லாப் பணங்களும் முகாமைச்சபை தீர்மானிக்க வேண்டிய வாறு ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவில் வைப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம் கூட்டுத்தாபனத்தின் எல்லா அல்லது எவையேனும் குறிக்கோள்களை எய்தும் நோக்கத்திற்கு கட்டிட நிதியம் ஆராய்ச்சி நிதியம், அபிவிருத்தி நிதியம், புலமைப்பரிசில்

நிதியம், ஸக்காத் நிதியம், ஹஜ் நிதியம், விதவைகள் அநாதைகள் நிதியம், இயற்கை அனர்த்தங்கள் நிதியம் போன்ற வெவ்வேறு விதமான நிதியங்களைத் தாபிக்கலாம்.

(3) இச்சட்டத்தின்கீழ் கூட்டுத்தாபனம் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிக்கையிலும், நிறைவேற்றுகையிலும், புரிகையிலும் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தை ஈடுசெய்வதற்கான எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள அசைவற்ற ஆதனங்களை வைத்திருத்தல்.

**6**. கூட்டுத்தாபனமானது, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதி விருப்பாவணக் கையளிப்பு ஆகியவற்றின் பயனைக் கொண்டு அல்லது வேறுவகையாகக் கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாக் கப்படக்கூடிய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைக் கொள்ளவும், வைத்திருக்கவும் சட்டப்படி ஆற்றலும் வல்லமையும் உடையதாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய எல்லா ஆதனமும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும் அவற்றை விற்க, குத்தகைக்குக் கொடுக்க, வாடகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறு வகையில் கையுதிர்க்கவுள்ள முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**7**. கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் 11 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய முகாமைச் சபையொன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும். முகாமைச் சபை கூட்டுத்தாபனத்தின் விதிகளின் நியதிகளின்படி தெரிவு செய்யப்படுதல் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைச்சபை, இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகிக்கும் இலங்கை ஜமாஅத் அன்சாரிஸ் சுன்னத்தில் முஹம்மதிய்யாவின் முகாமைச் சபையாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனம் இலாப நோக்கில்லாத ஒரு ஒழுங்கமைப் பாதல் வேண்டும்.

**8**. கூட்டுத்தாபனத்தின் பணங்களும் ஆதனமும் அவை எவ்வாறு பெறப்பட்டதாயினும், இதன்கண் தரப்பட்டுள்ள அதன் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கு மாத்திரமே பிரயோகிக்கப் படுதல் வேண்டும் என்பதுடன் அதன் பாகமெதுவும், எவ்வாறாயினும், பங்கிலாபம், கடன், மிகையூதியம் அல்லது வேறுவகையில்

அல்லது இலாபம் என்றவகையில் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ செலுத்தப்படுதலோ அல்லது மாற்றப்படுதலோ ஆகாது :

ஆயினும், எவ்வாறாயினும் இப்பிரிவின் ஏற்பாடு –

(அ) கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் அலுவலருக்கு அல்லது ஊழியருக்கு அல்லது கூட்டுத்தாபனத்தின் எவரேனும் உறுப்பினருக்கு அவரால் கூட்டுத்தாபனத்திற்கு ஆற்றப் பட்ட ஏதேனும் சேவைக்கு நல்லெண்ணத்துடன் நியாயமானதும் முறையானதுமான வேதனத்தின் கொடுப்பனவை ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் எவரேனும் உறுப்பினரால் அல் லது கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் ஒருவர் எந்தக் கம்பனியின் பங்குதாரர் ஒருவராக இருக்கின்றாரோ அந்தக் கம்பனியால் கூட்டுத்தாபனத்துக்கு வாடகைக்கு விடப்படும் வளவுகளின் நியாயமானதும் முறையானது மான வாடகையின் கொடுப்பனவை ;

(இ) கூட்டுத்தாபனத்தின் எவரேனும் உறுப்பினரால், அலுவலரால் அல்லது ஊழியரால் அவரது பணிகளை அல்லது கடமைகளைப் புரிகையில் அல்லது நிறை வேற்றுகையில் அல்லது கூட்டுத்தாபனத்தின் குறிக் கோள்களை முன்னேற்றுவதில் முகாமைச் சபையின் முன்னங்கீகாரத்துடன் கூறப்பட்ட நியாயமானவையும் முறையானவையுமான செலவுகளின் செலவீட்டை அல்லது மீளக் கொடுப்பனவைத்,

தடைசெய்தலாகாது.

கூட்டுத்தாபனத்திற்கு வருமதியானதும் அதனால் கொடுபடற்பாலதுமான தனிசு.

**9**. இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு முற்போந்த நாளன்று கழகத்தின் தனிசுகள், பொறுப்புக்கள் அனைத்தும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தினத்தில் கூட்டுத்தாபனத்திற்கு வருமதியாகவிருக்கும் எல்லாத் தனிசுகளும் ஒப்பப்பணங்களும் உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கத்திற்காக கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் கணக்குகளும் கணக்காய்வும்.*

**10.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது பின்வருவன தொடர்பில் தகுந்த கணக்குப் புத்தகங்களை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும் :

(i) கூட்டுத்தாபனத்தால் பெறப்பட்ட அல்லது செலவிடப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும் ;

(ii) கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களும் பொறுப்புக்களும்; அத்துடன்

(iii) கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்களும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகளும் ஐந்தொகையும ஆகக் குறைந்தது ஆண்டிற்கு ஒரு தடவையாவது கூட்டுத்தாபனத்தால் அந்நோக்கத்திற்கென நியமிக்கப்பட்ட எவரேனும் தகைமைபெற்ற கணக்காய்வாளரால் அல்லது கணக்காய்வாளர்களால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவில், "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது-

(i) இலங்கைப் பட்டயக்கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள தனியாள் ஒருவர்; அல்லது

(ii) கணக்காளர் குழுமமொன்றில் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்த

கைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக் கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

(5) கூட்டுத்தாபனத்தின் கணக்குகளும் ஐந்தொகையும் ஆகக் குறைந்தது ஆண்டிற்கு ஒரு தடைவையாவது கூட்டுத்தாபனத்தால் அந்நோக்கத்திற்கென நியமிக்கப்பட்ட எவரேனும் தகைமைபெற்ற கணக்காய்வாளரால் அல்லது கணக்காய்வாளர்களால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

**11.** காலத்துக்குக்காலம் முகாமைச் சபையின் ஏதேனும் கூட்டத்தில், இச்சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத அத்தகைய விதிகளை ஆக்குவது கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையான தாதல் வேண்டும். அத்தகைய விதிகளுள் உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளல், அவர்கள் பதவிவிலகல், பதவி விலக்கப் படுதல், பதவிதாங்குநர்களையும் முகாமைச் சபையையும் தெரிவு செய்தல் என்பவற்றிற்கும் அத்துடன் வேறுவகையில் பொதுவாக கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்வதற்கும் அதன் குறிக்கோள்களை எய்துவதற்குமான விதிகள், கூட்டுத்தாப னத்தின் பதவிதாங்குநர்களில் அல்லது முகாமைச் சபையில் ஏதேனும் வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஏற்பாடு செய்யும் விதிகள் என்பனவும் அடங்கும். அவ்விதிகள் ஆக்கப்பட்டவிடத்து அதே போன்ற கூட்டத்தில் அதேமுறையில் மாற்றப்படலாம், அவற் றோடு சேர்க்கப்படலாம், திருத்தப்படலாம் அல்லது இல்லா தொழிக்கப்படலாம்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சனை.*

**12.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினை கூட்டுத்தாபனத்தின் முகாமைக் குழுவின் இரண்டு உறுப்பினர்களின் முன்னிலை யிலன்றி எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படுத லாகாது. அவர்கள் சமுகமாயிருந்ததற்கு அத்தாட்சியாக அச்சாத னத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். அவ்விதம் கையொப்பமிடுதலானது எவரேனுமாள் சாட்சியாகக் கையொப்பமிடுதலுக்குத் தனிவேறாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் கலைக்கப் படுவதன்மீது எஞ்சியிருக்கும் ஆதனம்.*

**13.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல் அதன் எல்லாத் தனிசுகளும் பொறுப்புகளும் கொடுத்துத் தீர்க்கப்பட்ட பின்னர் எத்தன்மையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருந்தால், அத்தகைய ஆதனமானது கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது ; ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களை உடையதும் அல்லது உடையனவும், அதன் அல்லது அவற்றின் விதிகளின்படி அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப் பட்டுள்ளதுமான அல்லது தடை செய்யப்பட்டுள்ளனவுமான வேறு நிறுவனத்திற்கு அல்லது நிறுவனங்களுக்குக் கொடுக்கப் படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய நிறுவகம் கூட்டுத்தாபனம் கலைக்கப்படும் நேரத்தில் அல்லது அதற்கு முன்னர் சபையால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**14.** இச்சட்டத்தில் அடங்கியிருப்பது எதுவும் குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் பங்கப் படுத்துதலோ பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**15.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும்பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*